ஜானி ஜான் கான் சாலையில் அமைந்துள்ள ரொக்கையாபீ வக்ஃபிற்கு சொந்தமான 4 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,500 சதுர அடி பரப்பிலான வக்ஃப் சொத்து ஆக்கிரமிப்பிலிருந்து 28-7-2021 அன்று மீட்கப்பட்டுள்ளது. மேலும், திருச்சி டவுன், அஜரத் நபி சல்லலாவு அலைவ் அஸ்சலம் வக்ஃபிற்கு பாத்தியப்பட்ட சொத்து 14,750 சதுர அடி கொண்ட இடம் சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்து மீட்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு 500-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பதை உடனடியாக முடிக்க அதற்கும் ஒரு குழு அமைத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிருவாகத்தில் ஏற்பட்ட அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள் கவனத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளிப்படைத் தன்மையோடு ஆட்சி நடத்துகின்ற இந்த நல்ல ஆட்சியில், நல்ல தீர்ப்புகள் விரைவில் வெளிவரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***4307—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், காவூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் விடையை அளிக்கிறேன்.*

2021 செப்டம்பர் 6]

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், காவூர் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையினையேற்று இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தரம் உயர்த்தியது. அதற்குப் பின்பு இந்தப் பள்ளி அரசாங்கம் கேட்ட 2 இலட்சம் ரூபாய் தொகையையும் கட்டியிருக்கின்றது. இதற்கடுத்தாற்போல், மேல்நிலைப் பள்ளி 8 கிலோ மீட்டர் தொலைவில் முதலியார்பட்டியிலும், 10 கிலோ மீட்டர் தொலைவில் பூலாங்குளத்திலும் உள்ளன. இந்தப் பள்ளியின் நிர்வாகம் 2014 ஆம் ஆண்டின் தேவையான தொகையையும் கட்டியிருக்கின்றது. எல்லா வரன்முறைகளையும் பூர்த்தி செய்திருக்கின்ற காரணத்தினால் சுற்றுவட்டார கிராமத்திலுள்ள மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த ஆண்டு எத்தனை பள்ளிகளைத் தரம் உயர்த்த இந்த அரசு உத்தேசித்துள்ளது என்பதையும், அதில் இந்தப் பள்ளிக்கு முன்னுரிமை கொடுத்து தரமுயர்த்த வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை நிலை எண் 235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24–5–1997–ல் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வரசாணையில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து வகுக்கப்பட்ட சில முக்கியமான நெறிமுறைகள் பின்வருமாறு:*

10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருத்தல் வேண்டும்; ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும் அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் இடையே குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர் தூரம் இருத்தல் வேண்டும்; மகளிர் பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மலைப் பகுதி, ஆதி திராவிடர் மக்கள் தொகை அதிகமுள்ள இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அரசாணை நிலை எண் 379, பள்ளிக் கல்வித் துறை, நாள் 29–8–1997–ல் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்குச் செலுத்தப்பட வேண்டிய பொது மக்கள் பங்குத் தொகை மற்றும் கட்டட பங்குத் தொகை ரூ.2.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 49, பள்ளிக் கல்வித் துறை, நாள் 1–3–2007–ல் பள்ளியின் சார்பாக கீழ்க்கண்டவாறு நிலப் பரப்பளவு இருத்தல் வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது: மாநகராட்சி என்றால் 6 ground, *மாவட்டத் தலைமையிடங்கள் என்றால் 8* ground, *நகராட்சி என்றால் 10* ground, *பேரூராட்சி என்றால் 1 ஏக்கர் மற்றும் ஊரகப் பகுதி என்றால் 3 ஏக்கர் என்று வகுக்கப்பட்டிருக்கின்றன.*

முற்பகல் 10–25

ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், காவூர் அரசு உயர்நிலைப் பள்ளியின் சார்பாக, பொது மக்கள் பங்குத் தொகை மற்றும் கட்டட பங்குத் தொகை, ரூ.2.00 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், 10 ஆம் வகுப்பில் 29 மாணவர்கள் மட்டுமே பயின்று வருகின்றனர். இப்பள்ளி 2.41 ஏக்கர் இட வசதியை மட்டுமே பெற்றுள்ளது. இப்பள்ளிக்கு 8 கி.மீ. தொலைவிற்குள், அரசு மேல்நிலைப் பள்ளி, முதலியார்பட்டியில் செயல்படுகிறது. எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை, இப்பள்ளி முழுமையாகப் பூர்த்தி செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை பள்ளிகளைத் தரம்*

2021 செப்டம்பர் 6]

உயர்த்த இருக்கிறார்கள் என்ற விவரத்தையும் நான் கேட்டிருந்தேன். இதுதவிர, பாப்பான்குளம், வெள்ளிகுளம், தெற்கு மொடத்தூர், ஏ.பி. நாடானூர், சடையாண்டியூர் உள்ளிட்ட அனைத்து கிராமங்களும் பயன்பெறும் வகையில், 160 மாணவர்களைக் கொண்ட இந்தப் பள்ளி தரம் உயர்த்தப்பட்டால், சுற்றுவட்டாரத்திலுள்ள அனைத்து மாணவர்களும் பயன்பெறுவார்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய கோரிக்கையினை ஏற்று, நேற்றைக்கு முன்தினம் அங்கே ஒரு கல்லூரியையும் அமைத்திருக்கின்றார்கள். இந்தப் பள்ளியின் தரம் உயர்த்தப்பட்டால், மாணவர்கள் அந்தக் கல்லூரியில் படிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு அதைப் பரிசீலிப்பார்களா என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நல்ல நோக்கத்தோடுதான் கேட்கிறார், இல்லையென்று சொல்லவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயசீலன் அவர்கள் பேசும்போது, நாம் பல நேரங்களில் public representative-களுடைய கோரிக்கையை நிறைவேற்றும்போது, technicality-ஐப் பார்க்கக்கூடாது என்றும், practicality-ஐப் பார்க்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும். இந்த வருடம் எவ்வளவு பள்ளிகளைத் தரம் உயர்த்தப் போகிறீர்கள் என்று ஏற்கெனவே கேட்டிருக்கின்றார்கள், ஏற்கெனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் 12 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படும் என்றும், 22 பள்ளிகள் தரம் உயர்த்தப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நெறிமுறைகளுக்குட்பட்டு வருகின்ற காரணத்தினால், அந்த 22 பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள், அவற்றிலும்

அதிக அளவிலான கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். பொன்னேரி, அறந்தாங்கி, தளி, வேப்பனஹள்ளி, பெண்ணாகரம், விராலிமலை, கிள்ளியூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஆரணி, போளூர், அரக்கோணம், கோவை வடக்கு, விருத்தாசலம், சிவகங்கை உள்ளிட்ட தொகுதிகளைச் சார்ந்திருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கண்டிப்பாக அந்த நெறிமுறைகளுக்குள் வருகின்றபட்சத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற அரசு அவற்றையெல்லாம் உடனடியாக, படிப்படியாக நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், ஆர்ச்சம்பட்டி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி 2014 ஆம் ஆண்டிலேயே அவற்றுக்கான ஆவணங்கள் அளிக்கப்பட்டு, மக்களுடைய பங்கீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சம் செலுத்தப்பட்டது. அதேபோன்று குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பாப்பக்காப்பட்டி ஊராட்சியிலுள்ள கட்டாரிப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி, அதற்கான ஆவணங்கள் அனைத்தும் 2018 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டன. அதற்குரிய பங்குத் தொகை ரூ.2.00 இலட்சம் செலுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி, இந்த இரண்டு பள்ளிகளையும் தரம் உயர்த்தித் தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கான விதிமுறைகளை ஏற்கெனவே இந்த அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். அதற்குட்பட்டு வருகின்றபட்சத்தில், தொடர்புடைய* CEO *மூலமாக கருத்துரு பெறப்பட்டு,*

2021 செப்டம்பர் 6]

கண்டிப்பாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மயிலம் சட்டமன்றத் தொகுதியில், வல்லம் ஒன்றியத்தில் உள்ள பள்ளிக்குளம் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா? அதற்கு உரிய பங்குத் தொகை செலுத்தி 5 ஆண்டுகள் ஆகின்றன. அதற்குத் தேவையான இடங்கள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி தருவார்களா என அறிய விரும்புகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மயிலம் சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, இதேபோன்று தரமுயர்த்துதல் தொடர்பாக மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை மனுக்களைக் கொடுத்திருந்தாலும், அக்கோரிக்கைகள் அரசு வகுத்துள்ள நெறிமுறைகளுக்குள் வரும்பட்சத்தில், கண்டிப்பாக அவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

சமுதாயக் கூடம்

***1801—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—